# யூலை – 26 – வெள்ளி

**புனிதர்கள் சுவக்கீன் - அன்னா**

**ஆண்டவரின் நியமங்கள் சரியானவை: அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. திபா. 19:8**

---

## முதல் வாசகம் : சீராக் ஆகமம் 44:1,10 - 15

மேன்மை பொருந்திய மனிதரையும் நம்மூதாதையரையும் அவர்களது தலைமுறை வரிசைப்படி புகழ்வோம். ஆனால் அவர்களும் இரக்கமுள்ள மனிதர்களே. அவர்களுடைய நேர்மையான செயல்கள் மறக்கப்படுவதில்லை. தங்களது வழிமரபில் அவர்கள் நிலைத்திருக் கிறார்கள். அவர்களுடைய உரிமைச்சொத்து அவர்களின் வழித் தோன்றல்களுக்கும் கிடைக்கும். அவர்களின் வழிமரபினர் உடன் படிக்கையின்படி நடக்கின்றனர் அவர்கள் பொருட்டு அவர்களின் பிள்ளைகளும் அவ்வாறே நடப்பார்கள். அவர்களின் வழிமரபு என்றும் நிலைத்தோங்கும் அவர்களின் மாட்சி அழிக்கப்படாது. அவர்களு டைய உடல்கள் அமைதியாய் அடக்கம் செய்யப்பட்டன் அவர்களுடைய பெயர் முறை தலைமுறை தலைமுறைக்கும் வாழ்ந்தோங்கும். மக்கள் அவர்களுடைய ஞானத்தை எடுத்துரைப் பார்கள். அவர்களது புகழைச் சபையார் பறைசாற்றுவர்.

**பதில்பாடல் :** தாவீதின் அரியணையை ஆண்டவராகிய
கடவுள் அவருக்கு அளிப்பார்.

## நற்செய்தி : மத்தேயு 13 : 16 – 17

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கி: “உங்கள் கண்களோ பேறுபெற்றவை. ஏனெனில் அவை காண்கின்றன. உங்கள் காதுகளும் பேறுபெற்றவை. ஏனெனில் அவை கேட்கின்றன. நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் பல இறைவாக் கினர்களும் நேர்மையாளர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண ஆவல் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை“ என்றுகூறினார்.

**தியானம்:** இயேசுவோடு நெருங்கிப் பழகியவர்கள் பேதுரு முதலிய பன்னிரு திருத்தூதர்கள், மற்றும் மரியா, மார்த்தா போன்ற சீடர்கள். இவர்களுடைய கண்கள் பேறுபெற்றவை என இயேசு கூறியது எதற்காக? இங்கே இயேசு தம் சீடரின் புறக்கண்கள் பற்றி மட்டும் பேசவில்லை, அவர்களுடைய அகக்கண்கள் பற்றிப் பேசுகிறார். இயேசுவின் போதனையைக் கேட்ட மனிதர் நூற்றுக் கணக்கில் இருந்தனர். அவர் ஆற்றிய அரும் செயல்களைக் கண்டவர்கள் ஆயிரக் கணக்கில் இருந்தனர். ஆனால் இயேசுவைக் கண்டு, அவர் பேசியதைக் கேட்ட எல்லா மனிதரும் அவர் யார் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. அவருடைய சீடர்கள்தான் அவர் யார் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். அவர்கள்கூட பல தடவைகளில் இயேசுவின் சொற்களை முற்றிலுமாக நம்பிவிடவில்லை. இயேசு அவர்களிடத்தில் நம்பிக்கை இல்லை என்று அவர்களைக் கடிந்து கொண்டதும் உண்டு. ஆனால், சீடர்கள் இயேசு யார் என்பதைப் படிப்படியாகக் கண்டுணர்ந்தனர். இயேசு கடவுளிடமிருந்து வந்தவர் என்றும், கடவுளின் ஆட்சி பற்றிய நற்செய்தியை அறிவித்து, இறைவாழ்வில் நாம் பங்குபெற இயேசு சிலுவையில் இறந்து நமக்காகப் புத்துயிர் பெற்று எழுந்தார் என்றும் சீடர்கள் தம் இதய ஆழத்தில் உணர்ந்தனர். இத்தகைய அறிவை அவர்கள் பெறுவதற்குத் தூய ஆவியின் துணை அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அந்த ஆவி உயிர்த்தெழுந்த இயேசுவின் உடனிருப்பே. எனவே, சீடர்களின் கண்கள் பேறுபெற்றவை, ஏனெனில் அவை இயேசு பற்றிய உண்மையைக் கண்டுகொண்டன. இன்று வாழ்கின்ற சீடராகிய நாமும் இயேசு யார் என்பதைக் கண்டுகொள்ள அழைக்கப்படுகிறோம். நம்பிக்கையோடு நாம் அவரை அணுகிச் சென்றால் அவரை நாம் அடையாளம் கண்டுகொள்வோம். அப்போது நாமும் உண்மையிலேயே பேறுபெற்றவர்கள் ஆவோம்.